முதன்மை மாவட்ட நீதிமன்றம், புதுக்கோட்டை

வழக்கு எண். ஓ.எஸ்.6/16

2019ம் வருடம் நவம்பர் மாதம் 14ம் நாள் வியாழக்கிழமை

பி டபிள்யூ. 2 என்பவரது வாக்கு மூலம் (1873ம் வருடத்திய 10வது விதியின்படி என்பவரால் ஆணையிடப்பட்டு பிரமாணம் செய்யப்படுகிறது,

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ஜெயபால் | தந்தைபெயர் | |
| கிராமம் | | தாலுகா | |
| சமயம் | | ஜாதி | |
| தொழில் | | வயது | |

தேதி : 14.11.2019

நான் அறந்தாங்கி எண் 20 கோட்டை 3ம் வீதியில் குடியிருக்கின்றேன், நான் வீட்டில் வேலை இல்லாமல் இருக்கின்றேன், எனக்கு நீதிமன்றத்திலிருந்து சம்மன் வந்ததன் பெயரில் நான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன், எனக்கு வந்த நீதிமன்ற சம்மனில் 20,6,12 தேதியில் விஜயராணி என்பவர் எழுதிக்கொடுத்த பத்திரம் சம்மந்தமாக சாட்சியம் அளிக்க வேண்டும் என்று சொல்லப்பட்டுள்ளது, முத்துராமன் நாயுடு என்பவரிடமிருந்து விஜயராணிக்கு அவருடைய குழந்தைகளுடைய படிப்பு செலவுக்காவும் பராமரிப்பு செலவுக்காவும் ரூ5 லட்சம் நான் வாங்கிக்கொடுத்தேன், 20,6,12 தேதியில் ஏற்பட்டது, இதற்காக விஜயராணி ஒரு அடமானம் பத்திரம் ஒன்றை எழுதிக்கொடுத்தார், அப்போது வீட்டின் நகலை கொடுத்தார், அந்த பத்திரத்தில் நானும் பொன்சரவணன் என்பவரும் சாட்சி கையெழுத்து போட்டோம், அதில் நான் 2வதாக சாட்சி கையெழுத்து போட்டேன், விஜயராணி கையெழுத்து போட்ட பிறகு நான் கையெழுத்து போட்டேன், இப்போது வழக்கை மேடோவர் வாங்கி தன்ராஜ் என்பவர் போட்டிருப்பதாக தெரிந்து கொண்டேன், வாசாஆ 1ல் இரண்டாவதாக இருப்பது என்னுடைய சாட்சி கையொப்பம்,

குறுக்கு விசாரணை

வாதி தன்ராஜ் எனக்கு வேண்டியவர் என்று சொன்னால் எனக்கு அவ்வளவு பழக்கம் இல்லை. பதிவு செய்யப்படாத அடமானம் பத்திரத்தில் நான் சாட்சி கையெழுத்து போட்டேன் என்றால் சரி தான். வசாஆ 1 ரூ50 பத்திரத்தில் உள்ளது. ரூ5 லட்சம் தொகையானது ஐநூறு மற்றும் ஆயிரம் நோட்டுகளாக இருந்தன.

ஐநூறு எவ்வளவு நோட்டுகள் என்பதும் ஆயிரம் ரூபாய் எவ்வளவு நோட்டுக்கள் என்பதும் என்னால் சொல்ல இயலாது. அதை பிரதிவாதி சரி பார்த்து தான் வாங்கிக் கொண்டார். வாதி தன்ராஜ் எந்த தேதியில் மேடோவர் பெற்றுக்கொண்டார் என்ற விவரம் எனக்குத் தெரியாது. விஜயராணி முத்துராமன் நாயுடுவிடம் தொகை ஏதும் வாங்க வில்லை என்றால் தவறு. வாசாஆ 1ல் சாட்சியாக முதலில் பொன்சரவணன் என்பவர் கையெழுத்து செய்திருக்கின்றார். வாதி எனக்கு வேண்டியவர் என்பதன் காரணத்தினால் அவர் கேட்டுக்கொண்டதன் பெயரில் நான் உண்மைக்கு புறம்பாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் தவறு.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது
வழக்குநர் முன்னிலையில் சாட்சியின்
வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்கு
சொல்லப்பட்டு அவரால் கணினியில்
வடிவாக்கப்பட்டு சாட்சியிடம் படித்துக்
காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு
சாட்சியால் சரி என ஒப்புக்கொங்ளளப்பட்டது.

முதன்மை மாவட்ட நீதிபதி,
புதுக்கோட்டை.